673

ஆதியே துணை

சாகாக்கலை

மாண்டவர் மீண்டும் வருவது எப்படி?

தொகுத்து வெளியிடுவோர்:

மெய்வழி முருகமலை அனந்தர்
சபைக்கரசர், மெய்வழிச்சபை

மெய்வழி தவக்கொடி அனந்தர்
காரியதரிசி, மெய்வழிச்சபை

...ய்வழி பிரசுராலயம்
...பண தோட்டம் 8-வது தெரு,
...ன்ணாரப்பேட்டை, சென்னை-21.
...லைபேசி: 5 5 4 9 4 8

O84411
N83
164325

ஆதியே துணை

சிறப்புச் செய்தி

டாக்டர் M. கார்த்திகேயன் (பாபு) M.B.B.S.
அவர்கள் ஜீவப்பிரயாணச் செய்தி

சுந்தரத் திரளழியாச் சொர்க்க பதிக்காளாய்
உறங்கா விழிப்புலகுக் குற்ற பதியரசாய்

நீங்காநி லத்தினுக்கு நீண்டகு டிக்கரசாய்ப்
பல்லாண்டு பல்லாண்டு பல்கோடி ஆண்டாண்டும்

அழியாநி லத்தாள்கை **ஆண்டவர்கள் சந்ததிக்கே**
உற்றமறை யாதிஅருள் ஊழிள முத்திதுவே

—ஊழித் தீர்ப்புக் கன்னி

சென்னை பெசண்ட் நகரில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கும், படித்த, படிக்காத பாமர மக்களுக்கும் உதவி செய்து பெரும்புகழ் பெற்றவரும் வண்ணையம்பதியில் N. N. தோட்டம் தெருவில் 6, எண்ணுள்ள இல்லத்தில் குடியிருக்கும் மெய்வழிச் சபைக்கரசர் Dr. மெய்வழி **முருகமலை அனந்தர்** அவர்களின் திருக்குமாரருமாகிய டாக்டர் **கார்த்திகேயன் (பாபு)** M.B.B.S. அவர்கள் தனது 28-வது வயதில் 8—6—83 புதன்கிழமை யிரவு சுமார் 7 மணிக்கு உயிருக்குப் போராடிய ஆண் பிணியாளர் ஒருவருக்கு சிகிச்சை யளித்துக் கொண்டிருக்கும் போது டாக்டர் அவர்களின் இதயத்தில் ஒரு வித வலியேற்பட்டு அவரது உடலில் உயிர் அடங்கியது. இதைக் கண்ணுற்ற, சிகிச்சை பெற வந்த ஆண் பிணியாளர் கூச்சலிட்டு வெளியே வந்து அனைவரையும் கூப்பிட்டு காட்டினார்கள். இதைக் கேட்ட அனைவரும் அதிர்ச்சி-யுற்று ஓடோடி வந்து டாக்டரைப் பார்த்து அக்கம் பக்கத்திலுள்ள டாக்டர்களை அழைத்துக் கொண்டு வந்து காட்டினார்கள். அவ் வமயம் டாக்டர்களுக்கே புரியவில்லை. ஏனெனில் இதயத்துடிப்பு நின்றதே தவிர உறங்குவது போல் காட்சியளித்துக் கொண்டிருந்தார். கார்த்திகேயன் டாக்டர் அவர்களுக்கு எவ்வித தீட்டு அடையாளங்கள் எதுவும் இல்லாமல் மெய்வழிச் சபையைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு எப்படி பரிசுத்த அடையாளங்கள் பத்தும் தென்படுகிறதோ அதே பரிசுத்த அடையாளத்துடன் அடக்கமாகி இருந்தார்.

164325

மெய்வழிச் சபையாரின் ஜீவப்பிரயாண பரிசுத்த அடையாளங்கள் பின்வருமாறு

ஏகநாயகன் என்னும் சர்வசாட்சி வித்தாகிய சர்வேஸ் வரனுல் முத்தராங்கச் சன்னதங்கள் பெற்றுள்ள இதயப் பிரகாச பாரவான்கள் ஸ்தாபித்தருளிய மதச் சார்பினையுடைய மக்களே அடைந்த உய்கின்ற பெரும்பதப் பேரின்பச் செயல்.

சாகாக்கலை பெற்றவர்கள் ஜீவப்பிரயாணம் ஆன தூல அடையாளங்கள்

1 உலகத்தில் செத்தவர்களுக்கு இறுதி நேரத்தில் தீட்டு என்று ஏற்படுகிற, ஆணுக்கு சுக்கில ஜலமாகிய கசப்பு ஜலம் வெளியாகிப் பிணநாற்றம் எழும்புகிறதும், பெண்ணுக்கு சுரோ-ணிதக் கசப்பு ஜலம் வெளியாகிப் பிணநாற்றம் எழும்புகிறதும் இல்லாமல் பரிசுத்தமாக மணத்துடன் இருப்பார்கள் சாகாக்கலை பெற்றவர்கள்.

2 ஜீவப்பிரயாணம் ஆன பின்னும் தேகத்தில் கேசாதி பாதம் வெது வெதுவென்று சூடிருக்கும். விறைத்து, விறுவிறுப்பு ஏருது. உரித்த வாழைத் தண்டை வெய்யிலில் போட்டால் எப்படித் துவலுமோ அப்படியே கை கால் முதலிய அங்கங்களெல்லாம் துவண்டபடி இருக்கும்.

3 பாவக்கனம் ஏருமல் தேகமானது பூக் கூடையைத் தூக்குவது போல இருக்கும்.

4 கை கால்களில் சொடக்கு எடுத்தால் நெட்டிவரும்.

5 ஆண்டவர்களின் பாடல்களோ, திரு வாக்கியங்களோ, திருநாமமோ ஜீவப்பிரயாணம் ஆன தூல பிம்பம் இருக்கும் எல்லையில் ஆரவாரத்துடன் ஒலிக்கப் பெறும் நேரங்களில் அவர் கள் மேனியிலே வியர்வை கொப்பளிக்கும். துடைக்கத் துடைக்க வியர்வை மேலும், மேலும் கொப்பளிக்கும்.

6 வயோதிகமாய் உள்ளவர்கள் ஜீவப் பிரயாணமாகி நேரம் அதிகம் ஆக ஆக அவர்கள் முகத்தில் இளமைப் பூத்துப் பசுமை மஞ்சள் வர்ணம் உலாவும்.

7 பிராணன் நீங்கியவுடன் தொண்டை அடைத்துக் கொண்டு ஒரு சொட்டு ஜலம் கூட உள்ளே—இறங்காதே. அந்த அடையாளம் இல்லாமல் மெய்வழித் தெய்வமவர்களின் சன்னதி யிலிருந்து காஷாயத் தீர்த்தம் கொண்டு வரப்பெற்றுக் கொடுத் தால் அதைச் சாப்பிடுவார்கள். ஒரு மாதம் சென்று கொடுத்தால் கூட இக்காரியம் நடக்கிறது.

8 பிராணன் நீங்குமுன் கூனிக் குறுகி யிருந்தவர்கள், கால் கை வராமல் இருந்தவர்கள் புண் முதலியவற்றுல் துர்நாற்றம்

Q84411
N83

வீசிக் கொண்டிருந்தவர்கள் அத்தேகக் குறைகளும் நாற்றமும் நீங்கிச் சாகாக்கலையின் வைபவ சிறப்புடையவர்களாக ஆகின்றார்கள்,

9 அடக்கமான பின் வெளியே நாற்பது நாள் போட்டு வைத்திருந்தாலும் தேகம் கெடுவதில்லை. இது நாங்கள் நேரில் பார்த்த அடையாளம்.

10 மண்ணில் புதைத்தால் தேகத்தை மண் தீண்டாது. இவைகள் தான் சாகாக்கலை பெற்றவர்களின் தூல அடையாளங்கள். தேகத்தை மண் தீண்டாததிலும் மூவகை அடையாளங்கள் இருக்கும் என்று சன்னதியில் வெளியாகியுள்ளது.

இத்தேவ அடையாளங்கள் ஆண்டவர்களின் வெறுப்புக்கு இலக்காமல் அவர்களின் நிகரற்ற கிருபையை இறுதி நேரம் வரை பெற்றவர்களுக்கே கைபலிதமாகி நடந்து வருகிறது—இது சத்தியம்.

ஆண்டவர்களின் திருச் சன்னதியடைந்து அவர்களின் அன்புக்கு பாத்திரமாகிக் கொண்டவர்கள் எப்பெரும் பாவங்கள் செய்தவர்களாக இருந்தாலும், அப்பாவச் சேறானது ஆண்டவர்களின் கிருபையென்னும் வெயிலினால்—வெளியே யாருக்கும் தெரியாமல், உலர்த்தப் பெற்று இச் சாகாக்கலையின் பலனை அநேகம் பேர்கள் பெற்று விளங்குவது எங்களுக்கிடையில் பிரத்தியக்ஷம்—ஆகையால் உலகத்தில் எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் அன்னவரைப் பாவி என்று சொல்லாதே என்ற சர்வ வேதங்களினுடைய தீர்ப்பானது அறுபத்தேழு சாதிகள் ஒரே குலமாக ஆகி இருந்து வரும் மெய்வழியில் செயல் நடைமுறையில் அது நிஜமே தான் என எழுபது வருடகால அனுபவத்தில் கண் நேர் விளங்கி வருகிறது.

டாக்டர் கார்த்திகேயன் அவர்களுக்கு மேற்கண்ட அடையாளங்கள் அமைந்திருந்ததை கண்ணுற்ற அனந்தர்களும், பொது மக்களும் அதி ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

இவர் அடங்கி விட்ட செய்தி காட்டுத் தீ போல் பெசண்ட் நகரெங்கும் பரவி கட்டுக் கடங்காத கூட்டம் இவர் சிகிச்சை செய்து வரும் மருத்துவமனையில் கூடி டாக்டர் இருக்கும் நிலையைக் கண்டு கண்ணீர் வடித்து கதறினார்கள். அதன் பிறகு பொது மக்களே ஏற்பாடு செய்து வண்ணையம்பதியிலுள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு வந்து சேர்த்தனர். பிறகு அன்னாரை மெய்வழிச் சபையின் வரம்புக்குட்பட்ட அனந்தர் குடும்பங்களும் உறவினர்களும் பொது மக்களும் சூழ வந்திருந்து மண்மறைவு அடக்கம் செய்தது கண் கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

ஆசான் கிருபை மிகுந்ததினால்
  அந்த உடல் போய் மறு உடலில்
கூசாதிருந்து தன்னண்டை
  குறைவொன்றில்லா நிறைவாக
தேசாநேசர் சூழ்ந்திருக்க
  திருவோலக்கம் சேவிக்க
ஈசாயென்றே மறைபோற்ற
  எய்தும் பரமபத நெஞ்சே.

●

ஆதியே துணை

பொன் மேனி மின் வீசும் புகழுடம்புச் செய்கை

பாரில் பூவொன்று **பாபு** ஞனென்று
பார்க்கப் பண்புடன் பூத்ததே
நேரில் கண்டவர் நினைவில் என்றுமே
நிலையாய் நின்று நிலைத்ததே
ஆறில் கேட்டவர் ஏழில் கண்டவர்
ஆகிடா எட்டில் மறைந்ததே
பாரில் எங்களை ஏங்க வைத்துமே
பாலன் பாபுவை ஏற்றதேன்
யார்க்கும் வாய்த்திடா புண்ணியம் என்றுமே
யாங்கள் பாபுவால் மகிழ்ந்தனம்

யார்க்கும் நேர்ந்திடா ஏக்கம் தந்துமே
ஏற்றதேன் எங்கள் மகவினை
கார்த்தி கேயனே கண்ணெண நாங்கள்
கண் டுமே தினம் களிக்கும் நாள்
பார்க்கும் நொடியில் பாலன் ஏற்றுமே
பாத மலரில் சேர்த்ததேன்
மலையின் மீதொரு தீபம் போலவே
மஞ்சுடன் மகன் வாழுனள்
முளையிலே எங்கள் மகவை ஏற்றிட
முன்தவம் வந்து மூண்டதோ
விளைந்த நாங்களும் வினையினுல் வெம்பி
வீணிலே இங்கு வாடிட
விளைய வேண்டிய வித்தினை ஆண்டு
விரைந்து இன்று ஏற்றதேன்

செய்யும் வைத்திய சேவை செய்யவே
சேர்ந்து தேர்ந்து வளர்த்தனம்
வைய வாழ்வைத் துவங்கு முன்னரே
வான வாழ்வில் சேர்த்ததேன்
கையில் ஏற்றதை வாயில் வைக்குமுன்
கொடுத்த செல்வனை எடுத்ததேன்
மெய்யில் மேவிட மெள்ள நாள் பல
மேதினி நாங்கள் வாழ்வதோ
மெய்யில் மேவினேர் மேம்பதம் எய்திடில்
மேனியில் பத்து சாட்சிகள்
செய்த மாதவம் ஏதும் இன்றியே
சிறக்கவே பத்தும் பார்த்தனம்
பொய்யின் வாழ்விலே நாங்கள் வாடிட
புதிய அரும்பினைக் கொய்ததேன்
ஐயனே நாங்கள் இன்னும் வாழ்ந்திட
அத்தன் திருவுள்ளம் என்னவோ ?

5

பெற்ற செல்வங்கள் யாவும் பெய்துமே
பேணியே **பாபை** வளர்த்தனம்
மற்ற செல்வங்கள் இனியும் வேண்டுமோ
மனமும் தேரிட மருந்தேது
சுற்றம் யாவரும் **பாபை** சுற்றினோம்
அற்றதே எங்கள் ஆசைகள்
உற்ற தெய்வமே உண்மை என்னவோ
உறுதியாய் உன்னைப் பற்றினோம்

எங்கள் எண்ணமும் உங்கள் திட்டமும்
ஏதுமே ஒவ்வ தில்லையே
தங்கள் திட்டத்தை நாங்கள் ஓர்ந்திட
தயவினால் எம்மை மாற்றுவாய்
தங்கம் அன்று மறைத்த தேபோல்
தனையனை இன்று மறைத்தனை
இங்கு நாங்களும் ஏங்கி வாடிட
இன்றைக்கே பாபை ஏற்றதேன்
திங்கள் மாமுகம் வானம் கொண்டதே
தெய்வமே என்று காண்பமோ

மைந்தன் மாறவும் பேரன் தோன்றவும்
மாதவா உந்தன் சூதென்ன
ஐந்து மூழ்கவும் பத்து பூக்கவும்
ஐயனே யாவும் அற்புதம்
வந்தது யாரோ சென்றது ஏனோ
வாழ்வு என்பது மாயையே
விந்தினில் கோடி விளைந்தது ஒன்று
விந்தை என்னவோ அறிகிலோம்

வாழ்ந்தது காணூர் சென்றது வானூர்
வந்தது யாரோ அறிகிலோம்
நேர்ந்ததை எண்ணி ஏங்குதே தங்கை
நெஞ்சை தேற்றல் ஆகுமோ
தீர்ந்தது திட்டம் ஓய்ந்தது கொட்டம்
திண்ணம் என்பது தெய்வமே
சேர்ந்தது உன்பதம் சென்றது யாவும்
செம்மலே வேறு கதியில்லை

—மெய்வழி தவக்கொடி அனந்தர்
காரியதரிசி, மெய்வழிச்சபை.

ஆதியே துணை

மாண்டவர் மீண்டும் வருவது எப்படி?

சாந்தோக்கியோ உபனிஷத்தின் ஏழாவது அத்தியாயத்தின் சாரமாவது :- எல்லா வித்தைகளிலும் வல்லவரான நாரத மாமுனி தன் வித்தியா கர்வத்தைத் துறந்து ஆத்ம ஞானமாகிய பிரம்ம வித்தையைக் கற்றுக் கொள்ள சனத்குமாரரை அடைந்து குருவாக ஏற்றுக் கொண்டார். பிரம்ம வித்தையை கற்பிக்க வல்ல பிரம்ம ஞானியை குருவாகப் பெற்றவனையே வேதம் மனிதனுக மதிக்கிறது.

தனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டிக் கொண்ட நாரதரைப் பார்த்து சனத்குமாரர், ''நீர் இது வரை கற்றது யாவை?'' எனக் கேட்டார். அதற்கு நாரதர் ''ஐயனே! ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களையும் இதிகாசம், புராணம், இலக்கணம், பிதுர்கல்பம், கணித சாஸ்த்திரம், வான சாஸ்த்திரம், சகுன சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், நீ சாஸ்திரம், கால நிர்யம், நிருத்தம், சினகவி, பூதவித்தை, போர்வித்தை, சர்ப்ப வித்தை, கந்தர்வ வித்தை ஆகியவற்றைக் கற்றுள்ளேன்.

ஆயினும் எனக்கு பிரம்மவித்தை தெரியாது. அறிந்தவனே சோகமாகிய பிற பிறப்பை கடந்து நித்தியத்துவம் அடைய முடியும் என்று பெரியோர்கள் கூறக் கேட்டுள்ளேன். ஆகவே அதை அறிய வேண்டுமென்கிற ஏக்கத்தை எனக்கு போக்கியருள வேண்டும்'' எனக் கேட்டுக் கெண்டார்.

''நாமத்தினும் பெரியது நாதம், இவ்விரண்டிலும் பெரியது மனம். ஒரு கைப் பிடிக்குள் இரண்டு நெல்லிக்கனி அடங்குவது போல் நாமமும், நாதமும் மனத்திற்குள் அடங்கும். மனமே உலகமும் பிரம்மமும். ஆகையால் பிரம்மத்தை அறிந்து அதையே தியானிப்பாய். அதுவே பெரிய பலம். அதுவே சுகம். அழிகிற எதிலுமே சுகமில்லை''—என சனத்குமாரர் கூற நாரதர் ''ஐயனே அந்த பெரியதினும் பெரியதாகிய பிரம்மத்தை அறிந்து கொள்ள ஆசிக்கிறேன்''—என்கிருர்.

''எங்கே வேருென்றைக் காண்பதில்லையோ, வேருென்றைக் கேட்பதில்லையோ, அறிவதில்லையோ, அதுவே அளவு கடந்தது, அறிவுற்றது, அதுவே ஆத்மா—பிரம்மம். எங்கு வேருென்றைக் காண்கிருேமோ, கேட்கிருேமோ அது அற்பமானது அழிவுடையது. எவன் ஆத்மாவைக் கண்டு, ஆத்மா

வையே சிந்தித்து, ஆத்மாவிலேயே மகிழ்கிருனே, அவனே தன்னைத் தானே ஆள்பவன். அவன் எண்ணப்படியே எல்லாம் நடக்கும். அதனைக் காண்பவன் சாகிறதில்லை, துன்புறுவதில்லை. அனைத்தையும் அறிந்து அனைத்தையும் அடைவான்—என்று சனத்குமாரர் நாரதருக்கு பிரம்மவித்தை இன்னதெனக் காட்டி உபதேசித் தருளினர்.

பிரம்ம வித்தையை அறிந்தால் தான் மாண்டவர் மீண்டும் நித்திய தேகத்தோடு எழுந்து வர முடியும் என்னும் தத்துவத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

நீ என்பது உன் ஜீவன். பஞ்சு இழை, மயிரிழையைக் காணிலும் சிறியது. அந்த இழையிலே ஒரு துளை. அதனுள்ளே ஆவியாக நிற்கும், நுண்ணியத்திலும் நுண்ணியதே ஜீவன். அதுவே தேகாதியந் தங்களையும் இயக்குகிறது.

அது ஆத்ம மர்ம ஜலக்கடலின் மேல் இருந்து கொண்டு சர்வ சக்தியோடு, பிறிதோறின் துணையின்றி, தேகாதியந்தத் திற்கும் உற்பனத் தாயாக, உசுப்பி நடத்துவதாக விளங்குகிறது. பஞ்ச பூதமும் அதனிடத்திலிருந்து கடன் பெற்றே தேகமாகிய இந்தக் கூட்டைக் கட்டிற்று. அது மயனத்தில் மயனமாக இருந்து கொண்டு, சர்வத்திற்கும், தாய்க்குடிலாகவும், புராதன காலந் தொடங்கி சர்வத்திற்கும் காரண ரூபமாகவும், சர்வ சத்துக்களுக் கும் பெட்டகமாகவும், மணி வயிருகவும் வாய்த்ததிலிருந்து சகலத் திற்கும் உதவுவதான பெறு வயிறுடைய பஞ்ச பூதகணத்தலைய ரசனின் திருத்தலமாகவும் இலங்கி மிளிர்வது.

நீ யாகிய அந்த ஜீவ அணு இந்த மனித தேகம் எடுப் பதற்குமுன் தகப்பனின் விந்துவிலும் பிறகு தாயின் சுரோணிதத் திலும் இருந்தது. அதற்கு 48 நாளைக்கு முன் அவன் இரத்தத்தில் இருந்தது. அதற்கு 21/2 நாழிகைக்கு முன் உணவில் இருந்தது. அதற்கு முன் உணவுப் பொருள்களைத் தருகின்ற புல், பூண்டு களில் அல்லது மாமிசங்களில் இருந்தது. ஆகவே இந்த உயிர் இந்த மனித தேகம் எடுப்பதற்கு முன்பும்—என்றும் ஒரு ஜீவ அணுவாய் நீ இருந்தாய் என்பதை எண்ணிப்பார்.

ஆகவே நீ இந்த உடலை விட்டாலும் வேறு உடலை எடுப் பாய் என்பது உறுதியானது.

மனிதனின் தூலதேகத்தின் வயதின் அளவு-முதல் உற்பவ -கருத்தரிக்கும் நேரத்தில் தகப்பனுடைய எண்ணத்தில் வைத்திருக்

கிறது. மனிதனின் சுவாசம் ஐந்து ஐந்து நாழிகை கொண்டது ஒரு கலை ஆகும். அந்தக் கலையானது வலதும் இடதும் மாறி மாறி ஓடும். அப்படி ஒரு கலையானது மாறிய உடனே சனிக்கும் கருவுக்கு நூறு வயது. நூறு வயதிற்கும் மேல் வாழ்பவர்கள் தங்களின் தவ உன்னதச் செயலால் வயதை அதிகமாக்கிக் கொள் கிறார்கள். சுவாசக் கலை மாறி ஒரு நாழிகைப்பின் நாலு நாழியிருக் கும்போது ஜனித்தால் எண்பது வயதாயிருக்கும். ஒவ்வொரு நாழிகைக்கும் இருபது வயதாகப் பங்கிக் குறைக்க வேண்டும். அறை நாழிகை இருக்கும்போது ஜனித்த குழந்தை பத்து வயது தான் இருக்கும். கலை மாறுகிற போது ஜனித்தால் பிறந்ததும் இறந்து போகும். ஆகவே உன் வயதை எப்போது நிர்ணயிக்கப் பெறுகிறது என்றால் உன் தகப்பன் உன்னை ஜனிப்பித்த அது. நேர எண்ணத்தில் இருக்கிறது. இதை உன்னால் எட்டி அறிய முடியாது.

''எந்தை சுக்கிலாம் பரநாட்டில் வாழும் நாளில்
எடுத்தெறிய சுரோணிதப்பை வந்து வீழ்ந்தேன்
அந்த அறைதனில் அழிந்தன அனந்தானந்தம்
அழல்காற்று நெறுக்கம் துருசு அவஸ்த்தையாலே
நொந்து கணம் அறுகோடி எண்ணூர் லட்சம்
நெடுங்காலம் கருவரையில் எனை நீ காத்து
தொந்தியின் மும்மலக் கணவாய் துயர்கடத்தி
தொடர்ந்து நின்ற எம்மானை தொழுதல் செய்வோம்.

ஒரு சீவேசர் சன்னிதி முன்னிலையில் அவர்களின் மெய் மாதவச் செயலால் ஜீவ தேகத்தில் நுழைந்து மறு பிறப்பாளனாகி கோடி சூர்யப் பிரகாச மெய்ப் பொருளினைத் தரிசிக்கும் ஆன்ம துலக்க அறிவே ஆறுவது அறிவாகும். இந்த உன்னத நிலை அடைந்தவனே தேவனாகும். ஒரு குளவியின் உதவியால் ஒரு புழு குளவியாக மாற்றப் படுவது போன்ற செயலே இது.

''செத்திடமும் பிறந்திடமும் இனிச் சாகா திருந்திடமும் அத்தனையும் அறியாதார் அறியுமறிவு எவ்வறிவோ'' என்ற திரு வாசகப் பாசுரப்படி சாகாக்கலையைப் பெற்றவர்களே அறிவுடைய வர்கள் ஆகும்.

மனிதனை தேவனாக்கிய நாளே திரு நாளாகும். அதுவே தேவ ரகசியமும் வேதமும் விளங்கி விடியும் நாள். அஞ்ஞானக் கிழங்கை வேரோடு எடுத்து எறிந்து விட்டு மெய்ஞான வித்தை விளையும்படி ஊன்றும் நாள்.

ஒருவன் தன் ஜீவ தேகத்தை அறிந்த பிறகு தான் அவனுக்கு ஆத்ம நிலையை அறிவிக்க முடியும். இவனுக்குள் நின்று நிலவிக் கொண்டிருக்கிற அறுசுவைகளை அனுபவிக்கிற எல்லையும், உறக்கம் வரும் எல்லையும், கனவு காணுகிற எல்லையும் அறிவிக்க அறிந்து, ஞானக்கண் திறந்து பிரகாசிக்கப் பெற்ற பிறகு தான் ஜீவனை அறிய முடியும்.

இந்த தூல தேகத்திலுள்ளவர்கள் பரமாத்மாவைக் காண முடியாது. ஆனால் பரமாத்மா தூலமெடுத்து வந்து இத்தூலத் திற்கு அப்பாலுள்ள ஜீவதேகத்தில் குடியேற்றி வைத்த பிறகே ஜீவாத்மாவை அறிவிக்க முடியும்.

ஏழுவித ஆவிகள் கூடிச் சேர்ந்து தான் உன்னிடத்திலிருக் கும் பரிசுத்த ஆவியாக ஆகுகின்றது. இந்த ஏழு வித ஆவிகளுள் ஒன்று 'ஆவல்' என்ற ஆவி. இவ்விதமான ஆவிகள் ஏழும் ஒரே கோர்வையாகக் கட்டப்பட்டு ஒரு பரிசுத்த ஆவியாக தேகமெடுக் கிறது. அத் தேகத்துள் அடக்கமானவர்களின் பிம்பத்தை தீ யிலிட்டால் அந்த கோர்வை குலைந்து தனித்தனியாகி விடுகிறது. மீண்டும் அவர்களை நித்திய தேகத்தோடு எழுப்ப முடியாது.

பரமாத்மா நிலையிலுள்ளவர்களுக்கு மூச்சு ஓடாது. மூச்சு ஆடிக் கொண்டிருப்பது ஜீவாத்மா நிலையே. ஜீவாத்மாவின் மூச்சு அடங்குவது பரமாத்மாவை சார்ந்த நிலையில் தான்.

இத் தூல தேகத்தை நீக்கி ஜீவ தேகத்தில் ஏற்றி ஜீவாத் மாவையும் பரமாத்மாவையும் பரமாத்ம சொரூபர் அறிவிப்பார்கள். இந்த உடலில் இருந்து கொண்டே ஜீவதேகம் கடந்த காரண தேகத்திற்குள் போக்கு வரத் துள்ளவர்களே இந்த செயலைச் செய்ய தகுதியுடையவர்களாகும்.

வார்த்தை அளவில் நிற்பது தூல தேகம். நினைவு இயங்கு வது ஜீவதேகத்தில். ஆத்மாவின் உரைவிடம் காரண தேக்த்தில்.

தூல தேகத்திலேயே சதா குடியிருந்து கொண்டு உட் பொருளே தெரியாமல் தூல வாழ்வில் உழன்று கொண்டிருப்பவர் களுக்கு, ஜீவ தேகத்திற்கு அப்பாலுள்ள பிரதானமான காரண தேக வல்லபக் கருவியை எப்படியும் அறிவிக்க முடியவே முடியாது.

தூல தேகத்திலுள்ளவர்களுக்குச் செவிப்புலனில் அறிவிக் கிறதென்றால், ஜீவ தேகத்திலுள்ள இருட் கோளமாயிருக்கும் ''அசைவற்ற'' நினைவை அசைவுக்குக் கொண்டு வரும்

பொருளே ஆத்மா.

அதன் வல்லப லட்சணம் கூறுவதென்ருல், நூறு—நூற்றைம்பது ஆண்டு காலம் ஒருவன் உயிரோடிருந்தாலும் அவன் உடலை நாற்றத்திற்கு விடாமல் பிடித்து வைத்திருப்பதானது, காரண தேகத்தில் நின்று நிலவும் அந்த ஆத்மா தான். மைதுனத்தில் சுக்கில ஜலம் வெளியாகும்போது உன் மூச்சு 64 அங்குலம் வெளியே பாய்கிறது. உன் ஜீவனுடைய முழு வேக அளவு அவ்வளவு தான். அது நேரம் உன் ஜீவன் பிரிந்து வெளியாகாமல் 24 அங்குலம் உள்ளே இழுத்து வைப்பது காரண தேகத்தின் வல்லபம்.

ஆத்மா நித்தியமானது. அதன் செயலாகிய எண்ணம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கான பொருள், புகழ், இன்பம் தேடும் ஆசையுடையவனுக இருப்பது அதனுல் தான்.

நித்திய ஜீவன் அனித்திய தேகத்தில் இருப்பதால் தான், விரும்பிய அனித்திய சுகம், சொத்து எதை அடைந்தாலும் ஏக்கம் தணிவதில்லை. நித்திய ஜீவன் தனக்குரிய நித்திய தேகத்தில் குடியேறிக் கொண்டாலன்றி 'சாந்தி' என்னும் சலாமத்தாகிய செல்வத்தை அடைய முடியாது.

மனிதனைத் தவிர ஏனைய ஜீவராசிகளுக்கு இத்தகைய நித்திய நினைவு வருவதில்லை. மனிதனுக்கு மாத்திரமே இவ்வெண்ணம் வருவதின் காரணம் அவன் நித்திய பூரண பேரின்ப பரம பத வாழ்வுக்கு வந்தவன் என்று அறிய வேண்டும்.

யாரும் கட்ட முடியாத திருமாளிகையே உன் தேகம். பெறுவதற்கு அருமையான அதை நீ பெற்று வந்துள்ளாய். ஆனுல் அதற்குள் நுழைவதற்கு திருக்கதவத் திருவாசல் தெரியாமல் இருந்து கொண்டிருக்கிருய். வெளியே யிருக்கும் எல்லா அவஸ்த்தை அவலங்களுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிருய். மேலும் உன்னுடைய வர்ணீகரமான திருமாளிகையில் பிசாசு குடியிருக்கிறது. அந்த பிசாசை விரட்டி விட்டு உன் மாணிக்க மாளிகைக்குள் போய் வர நுழைவாயில் வைத்து தர வந்த செம்மல்களை ஏற்றுக் கொள்ளாமல், எனக்கு எல்லாம் தெரியும் என்றெண்ணி அலட்சியம் பண்ணி விடுகிருய். உன் உரிமையுள்ள மாளிகையினுள் நீ ஒரு நாளாவது நுழைந்து பார்த்திருக்கிருயா? இல்லையே. ஆகவே தான் வேதம் உன்னை 'குருடன்' என்று சொல்கிறது.

தன் மாளிகைக்கு தலைவாயில் தெரிந்து உள் நுழைந்து அங்குள்ள கோடி கோடி கால வாழ்க்கைச் செல்வத்தை அனுபவிக்க முடியாதவர்களைச் சர்வ புடைப் பினங்களும், வேதங்களும்,

வேத கர்த்தர்களும் பகைக்கிருர்கள். ஆனல் அதை கை போட்ட வர்களேயோ சர்வ கால இன்பங்களும் வரவேற்று நேசிக்கின்றன.

ஓரளவுள்ள ஆல வித்துக்குள்ளேயே கோடானு கோடியாக திணித்து வைக்கப் பட்டிருக்கிறதென்ருல் உனக்குள் இருக்கும் பரம வித்துக்குள் கோடான கோடியான வர்ணங்களும், உகக்கும் பொருள்களும், வெறுக்கும் பொருள்களும், கார சாரங்களும், பாதாளங்கள் ஏழும் சுவர்க்க உலகு எட்டும் சமுத்திரங்களும், முன்சென்ற காலங்களும், நிகழ்காலங்களும், வருங்காலங்களும், இவ்வாறு அனைத்தும் நுணுகி நுணுகிச் சிறுத்து அதனுள் அடங்கி யிருக்கின்றன. அதை உன் கண் கொண்டு பார்க்க முடியாது. பார்த்தால் உன் கண் தெரித்து விடும்.

'அணு'—என்று சொன்னதும் தன்னறிவிற் சாய்ந்து அது லேசாக நசுக்கப் படுவது'—என்று எண்ணி விடுவாய் என்றே, ''திடமுடனேர் அணுவிலணு'' வாய்த் திரண்டு கிடக்குது என்று கூறி வைத்துள்ளோம்.

கிரீடாதிபதி களுக்கெல்லாம் கிரீடாதிபதியின் சிம்மாசனக் கொலுவாகிய அந்தப் பரம அணு வாசனத்தில் தான் சகலசக்தி களும் இருக்கிறது. அந்த பிரம்ம வித்தின் உள்ளமைப் பெட்டகத் தைத் திறந்து காட்ட வல்லவர்கள் தான் மெஞ்ஞானச் செம்மல்கள்.

மனுவுக்கு ஒரே கடமையைத் தான் இறைவன் வைத்தான்—நித்திய தூலத்திற்கு குடி புகுவது தான் அக்கட்டளை. குபேரனுக இருந்தாலும் சரியே கோவணாண்டியாக இருந்தாலும் சரியே—இந்த ஒரே ஒரு கடமை தான். நித்திய தூலத்தை அடைகின்ற நித்திய செயலாகிய தீர்மானமான இந்த ஒரு வேலைக்கே மனித உடல் எடுத்து வந்தது. வயதையும் அறிவையும் பெற்றது அதற்காகவே.

ஒவ்வொரு மதத்திலும் இருக்கிற தலையான அடையாள மாகிய—பிரணவம், காயத்ரி, பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், கலிமா—என்பவையாவும் அழியாத ஜீவ தேகத்தையே குறிக்கும். அந்த தேகத்தில் தான் பேரின்பத்தை அனுபவிக்க முடியும். அழிதேகத் தில் அனுபவிக்கும் சிற்றின்பத்திஞல் ஜீவன் பறிபட்டுப் போகும் அளவுக்கு 64 அங்குலம் மூச்சு ஓடுகிறதே? ஆகையால் இந்த ஊன தேகத்திற்கு பேரின்பத்தை அனுபவிக்கின்ற சக்தி இல்லை. உன் சொந்த சுக்கிலாம்பர தேகத்தை அறிந்து அனுபவிக்க வேண்டும்.

சத்தியமாக நீ பேரின்ப வாழ்வை அனுபவித்துச் செத்துப் போக வந்தவன் அல்லவே அல்ல. அப்படிச் செத்துப் போவதற்கு இவ்வளவு பெரிய உலகையும் மகா அதிசயமான அறிவையும் இறைவன் தந்திருக்கவே மாட்டான்.

Q84411 164325
N83

திருகுர்ரான் :—''ஒவ்வொரு மனிதனும் மரணத்தை அனுபவித்தே திரவேண்டும். எனினும் உங்கள் செயலுக்குரிய பலனை பூரணமாக அடைவது மறுமை நாளில் தான். எவர் மரண நெருப்பில் அழியாமல் தப்பித்து முத்தி தேகத்தினுள் புகுத்தப் பெறுகிருரோ அவர் நிச்சயமாக பாக்கியத்தை அடைவராகும்.

மஹா நாராயண உபனிஷத் :—எது உயர்ந்தவற்றியெல் லாம் உயர்ந்ததோ, பெரியதற் பெரியதோ, வெளிப் படையாகத் தோன்ருதோ, அதுவே மெய்—சத்தியம்—பரபிரம்மம். இருதயத் திலிருக்கும் அதை அறிந்து ஒரு முக நோக்குடன் தியானிப்பவர் சாகாத நிலே எய்துகின்றனர். அறியாதவர்களிடத்து அகந்தை யாகவும் அறிந்தவர்களிடத்தில் பிரம்மமாகவும் இருப்பது அதுவே. அணுவுக்குள் அணுவாகவும் ஆற்றலில் மகாப் பெரியதாயும் உள்ள ஆத்மா மனிதனின் உள்ளத்துள் உரைகிறது. அதை ஒருவன் அந்தகரணத் தெளிவால் காண வேண்டும்.

பரம்பொருளின் இரகசியமாகிய அந்த ஓங்காரத்தை தியானிப்பவன் சாகாத நிலேயை அடைய முடியும்.

முன் வந்த பாரவான்களும் ஜீவன முத்தர்களும் இறந்து போகவில்லே—என்பதை சாகாக் கலேயால் நிரூபிக்க முடியும். நித்திய சூரியர்களாக முத்தி தேகத்தில் பரமபத நித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் திளேத்துக் கொண்டிருக்கிருர்கள். அத்தகைய பெரியோர்களின் அடக்கதலமே ஆலயம். அங்கு அவர்களில் அருப் பிரகாச தேவ ஆவி விசிரிக் கொண்டிருக்கும். அந்த எல்லேக்குள் செல்லும் பக்குவர்களுக்கு மனம் அடங்கி மூச்சு ஒடுங்கும்.

திருப்பதியில் கொங்கணரும், பழனியில் போகரும், சிதம்பரத்தில் திருமூலரும், திருவொற்றியூரில் பட்டினத்தாரும், நாகூரில் நாகூர் ஆண்டவரும் அடக்கமாகியுள்ள ஆலயங்களாகும். வித்தகர் இல்லாத கட்டிடங்களே ஆலயம் அல்லது கோயில் என்று கூறுவது சரியில்லே.

மனிதனின் இதயாசனத்துள் வீற்றிருக்கும் பிரம்ம வித் தெனும் சிதாகாசத்தினுள் வானம், பூமி, அக்கினி, வாயு, சூரியன், நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியயாவும் நுணுகி அடங்கி யுள்ளது. ஆதனுள் இல்லாததே இல்லே. அதனே பிணி, மூப்பு, மரணம் அணுகுவதில்லே அது அழிவற்றது, சோகமற்றது, சத்தியமானது. சங்கற்பமுடையது ஆதற்கு எதன் தேவையுமில்லே.

பகவத் கீதை (13:22) பரம்பொருளான பிரம்ம வித்து, பார்ப்பவனுக்கு உள் நின்று பார்ப்பதாயும், நினைப்பவனுக்கு உள் நின்று நினைப்பதாயும், அனைத்தையும் தாங்குவதாயும், அனுபவிப்பதாயும், மகேஸ்வரனுயும் உள்ள மெய்ப் பொருள் மனிதனுக்குள்ளேயே எழுந்தருளியுள்ளது''.

திரு மூலர் திரு மந்திரம்

''உரையற்ற தொன்றை உரை செய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரை காண லாமோ
திரையற்ற நீர் போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்றிருந் தான் புரிசடை யோனே''

சத்திய வேதம்

மத்தேயு (13:31—32) ''பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பானது. சகல வித்துக்களிலும் சிறியதாயினும் ஆற்றலில் சகலத்தையும் விட பெரியதானது.

சத்திய வேதம்

I பீட்டர் (1:23)'' நித்திய வித்தின் பரிசுத்த தேவ ஆவியினுல் மறுபடியும் பிறப்பிக்கப் பெற்றவனே பரலோக ராஜ்யத்தை அடைய முடியும்.'' என்று பிரம்ம வித்தைப் பற்றி கூறப் பெற்றுள்ளது.

திருக்குரான்: ஒஸ்—ஸம்சு—என்ற நாமம் சூட்டப் பெற்றுள்ள வித்து மனிதனுடைய எண்ணத்தின் பின்புறப் பிடரியில் நிறை நீதி ஆசனமிடப்பட்டு அதிலமைந்துள்ள சுத்தாவிச் சித்து வித்தான ஒத்தை முத்து.''

ஆண்டவர்கள் மான்மியம் :-

ஒரு சிறிய ஆலம் வித்தினுள் பெரிய விருட்சமானது—வளைந்தும், நெளிந்தும், நேர் கொண்டும், கூர் கொண்டும்—அதன் உருமாறியும், நிறம் மாறியும், ருசி மாறியும், கனம் மாறியும், சுருண்டு, திரண்டு, மிக நுணுகிச் சிறுத்து, ஒடுங்கி, அடங்கியிருப்பது போலவே—

ஏ! மனிதனே! உன்னுடைய உப்புப் பாண்ட உடலினுக்குள்ளே உள்ள வித்தினுள் முச்சகாதிய சொர்க்க மத்திய பாதாளங்களும், கதிர், மதி, மின், பனி, தாரகை முதலாகிய விலாசாசன நிலை முளை வினை கோடிகளும்—அதன் அசைவு பொசிவு கசிவு கொண்டெழுங் கார சார சராசர உயிர்க் கோடிகளும்—அத்—தெளிவார்த்த ஆருங் கோட்டுயிர்க் கோடியின் வேத விதி

மதி—கவன காதிய ஆதி அதீத முத்தொழிலுருக்களும்—சிரஞ்சீவி சகல ஐஸ்வர்ய—சர்வக்ஞ வாழ்வு வயது வரங்களும்—பஞ்ச பூதாதிய விசேட அறுகூறுச் சுவைக் கூட்டுறவுப் பிரிவு பிரிவிர்த்தி களும்—சேர்த்து மடக்கிச் சுருட்டித் திரட்டி மகா நுணுகி நுணுகிய வடிவினுக்கும் அப்பால் உள்ள நுட்ப நுணுகிய வடிவில் நின்று விளங்குகின்ற அணுவாண்ட பிரம்மாண்ட ஆணுவாசு அழியா வஸ்த்து அணுவதனை—வாடாத ஒரறிவாய்ப் பாயும் முளைக் கூருகிய மனக்கண் கொண்டன்றி அதாவது அகக்கண் கொண்டு விளங்கு வதன்றி ஈசரெனப் பெயர் படைத்தாருக்கும் எட்டி அறிய முடியாத தாகிய—அவ்வணு வடிவு வஸ்த்து வித்தினுக்குள்ளே அடக்கப் பெற்று வைத்துக் கொண்டிருக்கும்—சொற்கடங்கா வளஞ்சுரந்து —அமிழாச் சிறப்பேறி வளர்ந்து—கேட்டதெல்லாம் தருவதாயும்— கேளாததும் தருகுவதான—சர்வ மூல மந்திரார்த்த கற்பகத் தரு வெனும் ஓர் விருட்ச வித்தொன்றிருக்கிறது. பிறவியரே—இந்த கோடி சூர்யப் பிரகாச அதியரசு இரணமாலியும்—பிரம்ம சொரூப இதய மேருகிரியரசு தவசுமாலாயும், அணுவினுக்கு அணுவாகவும் அகண்டம் அனைத்தினையும் விழுங்கி விடும் அகண்டமாயும் நிலையுற நின்று விளங்குவதே மகா மகத்துவ பிரம்ம வித்து.''

உயிருள்ள உடல் பளு குறைந்ததும், உயிரையும் இழந்த பிணம் கனத்து பளுவாகவும் இருப்பது ஏன்? ஒரு தீபத்தின் சுடர் மேல் நோக்கி எரிவதைப் போல உயிராவி அடங்கிய ஏழு அணுக் கோர்வை உடலினுள் மிக மிக பாதுகாப்பான ஒரு எல்லையில் பொருந்திக் கொண்டு உடலை மேலே தூக்கி ஆட்டி அசைத்து இயக்கிக் கொண்டிருப்பதால் அதன் உண்மையான பளு குறைந்து தோன்றுகிறது.

உடலெடுத்துள்ள ஒவ்வொரு ஜீவராசியின் உடலுக்குள் நின்று அதனதன் வேலையை செய்து வரும் ஆத்மாவானது, அதனதன் தராதரத்திற்கு ஏற்ப கொசுவுக்கும், யானைக்கும், வண்ணத்துப்பூச்சிக்கும் ஊர்ந்து செல்லும் அட்டைக்கும், உயிர் அதனதன் உடல் வளர்க்கும் அளவில் ஆற்றல் பெறுகிறது. ஆனால் இந்த மனிதனிடம் இவனுக்கென்று தனிச் சீதனமாக ஜீவாத்மாவுடன் பரமாத்மாவும் அமைந்திருக்கிறது.

ஜீவனின் கனம் பூமியின் கனமே. ஆனால் அது தன் சொந்த பலத்தைக் காட்டாமல், எந்த உடலில் குடியேறியிருக்கிறதோ அந்த உடலைப் போல 32 மடங்கு அதிக கனத்துடன் அவ்வுடலைத் தூக்கிக் கொண்டு அலைகிறது. படுத்தாலும் தலைகீழ் நின்றாலும் மேல் நோக்கியே இயங்குவதால் உயிரோடிருக்கும் போது உடலின் உண்மையான கனத்தை அறிய முடியாது.

மாட்டுக்கு இருக்கிற ஆத்மா ஒரு நேரத்தில் உன்னிடமும் இருந்தது. அதாவது நீ குழந்தையாக இருந்தபோது. மாறி மாறி விளைந்து முதிர்வேறி ஆருவது அறிவு விளைந்து அகப் புறக் கருவிகள் முழு வல்லமை பெற்ற பிறகு தான் அவன் மனிதனு கிருன். இங்ஙனம் அருமையாக பெற்ற உயிரை அறிந்து அதனை ஓம்ப வேண்டியது மனிதனின் தலையாய கடமையாக இருக்கிறது.

எல்லா சீரும் சிறப்பும் தருகின்ற உயிரை, சர்வ வல்லமையும், ஆண்மையும், தருகின்ற உயிரை, எல்லா கல்வி, கலை, கண் காட்சியும், தருகின்ற உயிரை—சர்வ மதிப்பு, மகிழ்ச்சியும், தருகின்ற உயிரை—எல்லா இன்ப இச்சைகளையும் தர உனக்கு இரவு பகல் ஒயாது ஊழியம் செய்து கொண்டிருக்கும் இலஞ்சிய லட்சிய உயிரை—வரம்பு கோடற்ற வயதினை உயர்வினை உடைய இரஞ்ஞை தய உடம்பு உயிரை—உனக்கு உணர்ச்சி உணவு சுவையுடன் ஊட்டிக் கொண்டிருக்கும் இணை துணையான உயிரை தன்னுள் தரிசனையாகக் கண்டு என்றும் உன்னுடையதாகவே ஆக்கிக் கொள்ள வேண்டாமா? உயிரைவிட அருமையானதும் அதைப் பிரிவதை விடக் கொடுமையானதும் வேறு எதுவுமே இல்லையே!

இத்தகைய அழியாத உயிருக்கு இந்த அனித்திய தேக வாழ்வுக்குப் பிறகு நித்திய தேக வாழ்வு உண்டு என்பதை அறிந்து கொள்ளாததால் தான் மறுமையைப் பற்றியக் கவலை திவலை கூட இல்லாமல் அவல வயிற்றை வளர்ப்பதற்கே கவலைப் பட்டு அல்லும் பகலும் பேயாய் அலைகிருர்கள். ஒரு கம்பு விதையைப் பார்க்கும் குழந்தைக்கு அது முளைத்து வளர்ந்தால் 5 அடி உயரச் செடியாகுமென்பது தெரியுமா? தெரியாதே. ஆதைப் போல வரப் போகும் நித்திய வாழ்வைப் பற்றிய விவரம் ஆன்ம அறிவு பெற்றவர்களுக்கே தெரியும்.

மனிதனுக்கு மாத்திரமே நித்திய ஜீவ தேக வித்து இருப்பதால் தான், என்றும் இருக்கும் எண்ணத்தில் பொருள் தேடுதல், கட்டிடம் கட்டுதல், கீர்த்தி அடைதல் ஆகியவற்றில் ஆசை உடையவனுக இருக்கிருன். இவனைத் தவிர யானை முதல் எறும்பு கடை எண்பத்திநன்கு நூராயிரம் ஜீவராசிகளுக்கு இம்மாதிரியான பர்மனென்ட் ஆன எண்ணம் செயல் வருவதில்லை.

தனக்கு வரப் போகும் மரணமென்னும் பேராபத்தை அறிந்து அதனின்று மீண்டு கொள்ள வேண்டும் என்பதற்காகவே மனிதனுக்கு அறிவு என்னும் மாணிக்கம் தரப் பெற்றுள்ளது. வரப்போகும் ஆபத்துக்களை தடுத்துக் கொள்ள உஷாராக இருக்க வேண்டிய பயத்தை உடையவனுக இருக்கிருன்.

164325

நோய் நொடி வந்தால் சும்மா இருந்து விடுகிருஞ? மரண தண்டனை விதிக்கப் பட்டால் ஆதனின்று மீண்டு கொள்ள எவ்வளவு முயற்சி எடுத்துக் கொள்வான். ஆனல் நிரந்தர நிவாரணம் தேடி அதற்குரிய வழியில் செல்லத் தவறி விடுகிருன்.

அப்படியானல் மரணத்தினின்று நிரந்தரமாக தப்புவதற்கு வழியுண்டா? நிச்சயமாக உண்டு. அதற்காகவே சர்வ வேதங்களும், சர்வ மதங்களும் வந்தன. பாரவான்களும் வந்து கொண்டே இருக்கிருர்கள்.

பாவியானலும் ஞானியானலும் எல்லாருமே செத்துப் போகிருர்கள் என்று அறியாதவர்கள் தான் எண்ண முடியும். உயிர் உடலை விட்டு வெளியேறி விடுவதையே சாவு என்று கூற வேண்டும். உயிர் உடலுக்குள் அடங்குவது அடக்கம் அல்லது சமாதி நிலை என்றே கூற வேண்டும்.

உதாரணமாக ஒரு திருடனை இரு காவலர் ஜெயிலுக்குக் கொண்டு போகிருர்கள். ஜெயில் அதிகாரி காவலர் புடை சூழ போவதும் ஜெயிலுக்குத் தான். திருடன் ஜெயிலுக்குப் போவது தண்டனை அனுபவிக்க. அதிகாரி ஜெயிலுக்குப் போவது அடக்கி ஆள. இருவருமே ஜெயிலுக்குப் போனலும் தோற்றத்தின் வேறு பாட்டைக் கொண்டு செயலை அறியலாம்.

இஸ்லாமிய மதக்கோட்பாடின் படியும் மரணம் இருவகை படும். நன் மரணமாவது ''மௌத்துன் நஃப்ஸ் ஹயாத்துல் கல்பு'' என்பதாகும். அதாவது ஆணவத்தைக் கொன்று இதய வித்தினை உயிர்ப்பிப்பதாகும். சாவருமுன் சாகப் பழகுவதாகும். இறைனேசச் செல்வர்கட்கே இது வாய்க்கும்.

இதற்கு மாற்றமான வேதனை மரணம் பாவிகளுக்கு உண்டாவதாகும். மரண வேதனைகள் 624000 ஆகும். பாவத்தால் சாகிறவன் இத்தனை வேதனைகளையும் அநுபவிக்க வேண்டும். உடலைப் பிரிந்த உயிர் 360 பயங்கரங்களை அநுபவிக்க வேண்டும். அவை மரணத்தை விட கொடுமையானவை.

இத்ரீஸ் (அலை) அவர்களின் உயிரை எமபிரான் பிடித்துப் போய் மீண்டும் அவ்வுடலுடன் உயிர் பெறச் செய்த போது மரணத்தைப் பற்றி அவர் கூறியதாவது ''உயிரோடு ஒரு பிராணியின் தோலை உரித்தெடுத்தால் அது எவ்வளவு வேதனைப்படுமோ அவ்வாறு இருந்தது'' என்று கூறினர்.

''ஒருவன் எதில் வாழ்ந்தானே அதில் இறப்பான்; எப்படி இறந்தானே அப்படியே மறுமையில் எழுப்பப் படுவான்'' என்று நபிகள் நாயகம் அருளியுள்ளார்கள்.

திருவள்ளுவ நாயனர், பிரம்ம வித்தை அறிந்த வித்தகரின் உயிர் அடக்கமாவதை ''உளதாகும் சாக்காடு'' என்கிருர். உயிர் பிரிவது இலதாகும் சாக்காடு. வடலூர் வள்ளலல் பெருமானர் உயிரோடு செத்தார்—மீண்டும் எழுந்து வருவர் என்பதால் உயிர் போய் சாகிறவர் அலகையாவர்.

கிருஸ்த்துவின் வேதப்படி நன் மரணத்தை கர்த்தருக்குள் ஒடுங்குதல் என்றும் மற்றதைப் பாவத்தின் மரணம் என்றும் கூறப் படுகிறது.

அவ்வாறே மரண தருவாயில் அவன் சுவர்க்கத்திற்கு உரியவனு அல்லது நரகவாதியா என்பதை தோற்றத்தால் அறிய லாம். உயிருக்கு ஆதாரமான சுக்கில ஜலம் கெட்டு வெளியாகி, பிண வாடைவீச, விறைத்து, கனத்து, குளிர்ந்து, முகம் விகாரப்பட்டு சாகிறவன் நகர தண்டனைக் குரியவன். அலகை தேகம்வந்து விடும்.

மாருக பரிசுத்தமாக முகமலர்ச்சியுடன் சூடிருக்க, துவ-ளும்படி, கனக்காது இருப்பவரின் உயிர் உடலுக்குள்ளே இருக்கும் முத்தி தேகத்துள் அடக்கமானவராகும். சுக்கில ஜலம் வெளியாகாத தால் பிணவாடை இருக்காது. தீர்த்தம் கொடுத்தால் உள் வாங் கும். இந்த பிம்பத்தை மண்மறைவு செய்ய வேண்டும். அங்கே நித்திய முத்திதேகம் விளைவேறி தீர்ப்பு நாளில் மீண்டும் எழுப்பப் படுவர்.

மாண்டவர் மீண்டும் எழுவது நடக்கிற செயலா, என்பது அறியாதவர்கள் நம்ப மாட்டார்கள். பிறவிக் குருடனுக்கு சூரியனைப் பற்றி கூறினுல் நம்ப மாட்டான் என்பது போல் தான். ஒன்றைப் பற் றிய அறிவு வரும்வரை அதை நம்ப முடியாது தான். இந்திர கோபப் பூச்சியைப் பற்றி தெரியுமா? மழைக்காலத்தில் செம்மண்ணில் உற் பத்தியாகும். சிகப்பு வெல்வட்டுப் போல் நிறமுடையது. முட்டை யிட்டு குஞ்சு பொறிக்கும் அதன் வயது 60 நாட்கள் தான். இறந்து போன அப்பூச்சிகளைப் பொறுக்கி உலர்த்தி பத்திரப்படுத்தி, வைத்து, சில, அல்லது பல ஆண்டுகள் கழித்து அதை எடுத்து தூளாக்கி, நீரில் நனைத்த வைக்கோலில் தூவி மூடிவைத்து மறு நாள் பார்த்தால் ஒவ்வொரு தூளும் ஒரு பூச்சாக உருவெடுத்து வரும். செய்து பார்த்த பிறகு தான் நம்ப முடியுமென்ருல் செய்து பாருங்கள்.

இங்ஙனம் ஒரு பூச்சியின் உடலின் தூசியே உருவெடுக்கிற தென்றால் மாண்ட மனிதனின் வித்து மண்ணில் விளைவேறி அதற்குரிய ஆவி உலகில் பரவும்போது நித்திய தேகத்தோடு மீண்டும் எழுந்து வருவான் என்பது ஆன்ம அறிவு பெற்றவர் களுக்கு சத்தியமான உண்மையாகும்.

சத்திய வேத உண்மையாவது: பிதா மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் நமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். (யோ 5:21). பிதாவிடம் நம்மை சேர்த்து, பிதாவை நமக்கு வெளிப் படுத்துவதால் அவரே நித்திய ஜீவனாய் இருந்து அதை நமக்கும் அளிக்கிறார். (14:6) விசுவாசத் தால் கிருஸ்த்துவில் நிலைத்திருப்பவன் நித்திய ஜீவனைப் பெறலாம். (3 : 15, 16; 6 : 40, 47; 20 : 31;) உயிர்த் தெழலும் ஜீவனும் நானே. என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். என்னை விசுவாசிக்கிற எவனும் மரிப்பதேயில்லை. குமாரனிடம் நித்திய ஜீவனைப் பெறுவதையே, ஆவியால் மறுபடியும் பிறத்தல் என்று கூறப்படுகிறது.

கொரிந்தியர். 15: மரித்தோர் உயிர்த்தெழுதல் இல்லை யென்று உங்களில் சிலர் சொல்லுவதெப்படி? மரித்தோர் எழாவிட் டால் கிருஸ்த்துவும் எழுந்ததில்லை. எழாவிட்டால் எங்கள் பிர சங்கம் வீண், உங்கள் விசுவாசமும் வீண். கிருஸ்த்துக்குள் நித் திரை அடைந்தவர்கள் அழிந்து போவார்களோ? ஆதாமினால் எல்லோரும் எழுப்பப்படுவர். மரித்தவர் மீண்டும் எழாவிட்டால் ஞானஸ்நானம் பெறுவதால் என்ன பலன். மாண்டவர் மீண்டும் எழுவது எப்படி என்று ஒருவன் கேட்டால், மதி கேடனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர் பெற மாட்டாதே. இனி விளையப் போகும் செடியை விதைக்காமல் ஒன்றின் வித்தினை யல்லவா விதைக்கிறாய். கடவுள் ஒவ்வொரு விதைக்கும் அதற்குரிய வினையின் மேனியைக் கொடுத்திருக்கிறார். எல்லா மாமிசமும் தேகமும் ஒரு தன்மையானதல்ல. மனித தேகம் வேறு. மிருக தேகம் வேறு. மீன் தேகம் வேறு. வானத்துக்குரிய தேகம் வேறு. பூமிக் குரிய தேகம் வேறு. சூரியனின் மகிமை வேறு. சந்திரனின் மகிமை வேறு. நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் மகிமையில் வேறுபாடுண்டு.

மாண்டவர் மீண்டும் எழுதலும் அப்படியே இருக்கும். அழி வில் விதைக்கப்பட்டு மகிமையோடு எழுப்பப்படும். கனவீனத்தில் விதைக்கப்பட்டு, மகிமையோடு எழுப்பப்படும். பலவீனமாய் விதைக்கப்பட்டு வல்லமையோடு எழுப்பப்படும். ஜன்ம சுபாவமாய் புதைக்கப்பட்டு ஆவிக்குரிய தேகமாய் எழுப்பப்படும். முதல் மனிதன் பூமிக்குரிய மண் ஆதாம். எழுந்து வருபவர்பரலோகத்

துக்குரிய விண் ஆதாம். ஒரு இரகசியத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். நாம் அழிகிறதில்லை. ஒரு நேரம், இமைப் பொழுதிலே கடைசி எக்காலம் தொனிக்கும்போது நாமெல்லோரும் மறுரூபமடைவோம். அப்போது மாண்டவர் மீண்டும் நித்திய மேனியோடு எழுந்து வருவார்கள். அழியும் தேகம் அழியாத தேகமாக மாற்றப்படும். மரணம் ஜெயமாக விழுங்கப்படும். மரணமே உன் கூர் எங்கே? என்ற வேதவசனம் நிறைவேறும். எனவே ஆண்டவரின் விசுவாசத்தில் நிலைத்திருங்கள்.

மத்தேயு. 22 : 23—33. உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற அது சேயர் யேசுவிடம் வந்து, போதகரே! ''ஒருவன் பிள்ளை இல்லாமல் இறந்து போனால் அவன் மனைவியை அவன் சகோதரன் விவாகம் பண்ணி சந்தானம் உண்டாக்க வேண்டுமென்று மோசே சொல்லிருக்கார். எங்களுக்குள் ஏழு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவன் விவாகம் பண்ணி சந்தானமில்லாமல் இறந்து போனதால் அடுத்தவன் அவளை விவாகம் செய்து இறந்தான். இவ்வாறே அவளை ஏழு பேரும் மணக்க வேண்டியதாபிற்றே. கடைசியில் அவளும் இறந்தாள். இப்படியிருக்க உயிர்த்தெழுந்தால் அவளுக்கு எவன் கணவனாவது? ஏழு பேருக்கும் அவள் மனைவியாக வேண்டுமே? என்று கேட்டார்கள். அதற்கு யேசு கூறியதாவது ''நீங்கள் வேதங்களையும், கடவுளின் மகிமையையும் புரிந்து கொள்ளாமல் மோசம் போகிறீர்கள. உயிர்த்தெழுந்தவர்களிடம் கொள்ளலும் கொடுத்தலுமாகிய விவாகமில்லை. அவர்கள் எல்லோரும் பரலோகத்தில் தேவதைகளாயிருப்பார்கள். அவர் மரித்தோரின் கடவுளல்ல. நித்திய ஜீவிகளின் கடவுள்'' இதைக் கேட்டு எல்லோரும் பிரமித்தார்கள்.

அந்த நித்திய தூலத்தைப் பெருததால் தான், ஏமாந்து ஆதை கை நழுவ விட்டு விட்டதால் தான் அதற்கு அடையாளமாகவே, இறுதி நேரத்தில் இவனுக்கு கசப்பு தீட்டு நீர் வெளியாகிறது. அதையே ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தில்

''கசப்பு இறுதி நேரம் கண்டு விடிலோ
கடு நரகக் கொடியோ னென்று ஊதூது சங்கே
சாதிமனுக்கோர் சொல்லிதே போதும் போதுமே
சண்டாளர்க் காயிரம் தான் சொன்னாலுமெங்கே''

இது ஓர் சொல் என்ருல் ஓர் சொல்லா? உனது ஜீவிய காலத்திற்கே செய்கின்ற திருப்பணியையும், அதனால் வரும் பிரயோகசனமாகிய—கற்பாந்த கோடி காலம் அழியாத வாழ்விற்குரிய—செயலையும் குறிக்கின்ற வார்த்தையே இது.

மெய்வழி ஆண்டவர்கள் திருப்புத் தூரில் செய்த பிரசங்கத்தின் சிறு பகுதி :—

''நீ—என்ன தெரியுமா? இம்மண்ணுலகிலே நீ சீரஞ்சீவி பட்டம் பெறுவதற்கான கைம்முதல் ஆஸ்த்திவாரம் பெற்று வந்தவன்—இது சத்தியம்—இது உனக்குத் தெரிய வேண்டும்—நீ கணக்கற்ற கிரணோதய உலகம் புகுந்து ஆதற்கு அதிபதியாக நின்று ஆள வந்தவன்—அதை விட்டு விட்டு—இங்கே சழக்கக் கலியன் பழக்கத்தில் புழங்கி விளக்கற்ற சஞ்சலம் நிறைந்த இருள் உலகம் புகுந்து அவஸ்த்தைக்கு ஆளாகப் போய் விடாதே—உஷார்—இதல்லாமலும் நீ தேவ சிரேஷ்ட்ட னுவதற்கு வந்தவன்—அதைத் தள்ளி வைத்து விட்டு—அது நம்மாலே முடியுமா என்று விளம்பிக் கொண்டு—அறிந்த யோக்கியரைப் போலத் திரியும் அறியாக் குருக்கள் மார்களை உகந்து பின்பற்றி அலைகின்ருய்—நீ நித்திய னுவதற்கு வந்தவன்—இங்கே நீ அனித்தியனுகப் போவதற்கே இடைக் கட்டிக் கொண்டிருக்கிருய்—எமன் பதி கடந்து வீரக்குன்றேறி வந்தவன்—என்பதை எடுத்துக் கூறி அதில் உன்னை ஆக்கி நிருபிக்கவேயாம் வந்திருக்கிரோம்.''

21

●

ஆதியே துணை

ஜீவப்பிரயாணம்

கோன்—என்ற உயிர்—தான் ஓர் அணுவாக இருக்கும் போது மனித உடல் எடுத்து பூரணத்துவம் பெற தன் பிரயாணத்தைத் துவங்குகிருர்.

காய், கனி, தானியம், மாமிசம்—ஆகிய ஒன்றில் அணுக்களோடு அணுவாக சலந்து கொள்கிருர்.

விந்தியன் என்ற மனிதன் அதை உண்கிருர். அவை சீரண மாகி பெரும்பகுதி நரகலாக வெளியேறி விடுகிறது. இரத்தமாகும் சிறு பகுதியில் கோன் அணுவாக இருக்கிருர். இரத்தத்தின் சத்தான பகுதி விந்துவாகும்போது, கோன் தானும் ஒரு விந்து அணுவாக விந்தில் இருக்கிருர்.

விந்து நீரில் மூன்று விதமான விந்தணுக்கள் இருக்கின்றன. தலை சற்று பெரியதாக இருக்கும் விந்தணு பெண் குழந்தையாக உருவெடுக்கும். ஆண் குழந்தையாகப் போகும் கோன் விந்தணு சற்று கனமாக இருக்கும்.

விந்தியனுகிய ஆணின் கரு இரு கிளைகளாக பிரிந்திருக்கும். ஒரு கிளையில் சில ஆண் விந்துக்களும், இன்னெரு கிளையில் சில பெண் விந்துக்களும் இருக்கின்றன. சுமார் 250 விந்தணுக்கள் கருக்கிளையை நோக்கி பிரயாணம் செய்கின்றன. அவைகளில் கோன் மாத்திரமே ஆண் கிளையில் ஏறி ஒரு வித்தைக் கவ்விக் கொள்கிருர். 74 நாட்கள் அங்குள்ள அக்கினியில் அந்த வித்தினை கொய்து கொண்டு வெளியேறத் தயாராகி விந்தியனின் எண்ணத்தில் காமத்தை உண்டாக்குகிருர்—இப்போது கோன், விந்—தோடு சேர்ந்து, கோவிந் ஆகிருர்.

விந்தியன், மாது என்னும் பெண்ணை இணங்கச் செய்து அவளோடு மதுனம் செய்கிருன். இருவரின் காம ஈர்ப்பு சக்தியும் இணையும் போது அவனிடமிருந்து 500CC இந்திரியம், அவளுடைய கர்ப்பப் பையுள் பாய்கிறது. அதில் 5000 லட்சம் விந்தணுக்கள் இருக்கின்றன. அதில் கோவிந் ஒருவரே வல்லமையுள்ளவர்.

பெண்ணின் அண்ட கோசத்தில் பல ஆயிரக்கணக்கான சினை முட்டைகள் இருக்கின்றன. அதிலிருந்து வெளியான ஒரு சினை முட்டை 48 மணி நேரத்திற்குள் ஒரு விந்தணுவை சந்தித்து தன்னுள் அமிழ்த்திக் கொள்ளாவிடில் அது மடிந்து விடும். சினை முட்டை விந்தணுவை விட ஐம்பதினாயிரம் மடங்கு பெரியதாகும். பெரிய உளி துளைத்து விடுவது போல விந்தணுவே வல்லபம் மிகுந்தது.

மைதுனத்தின் இன்ப உணர்ச்சியால் து—என்னும் சினை முட்டை கோவிந் என்ற விந்தணுவை சந்திக்க தயாராகி விடுகிறது. கோவிந்தோடு வந்த 5000 லட்சம் அணுக்களில் பாதியளவே து—வை நோக்கி நீந்திச் செல்ல முடிகிறது. அதில் கருப்பையின் தலைப்பகுதியை நோக்கி 6000 அணுக்களே செல்கின்றன. சரியான பாதையில் செல்லாத பாதி மடிந்து 3000 விந்தணுக்களே து—சினை முட்டை இருக்கும் பகுதிக்குள் செல்ல முடிகிறது. அவைகளில் 300 விந்தணுக்களே து—வை நெருங்குகின்றன என்றாலும் அவை கோவிந்—அணுக்கு துணையாகவே இருக்க முடிகிறது. அவைகளின் தலைப்பகுதியிலிருந்து வெளியாகும் இரசாயனப் பொருள்கள் சினை முட்டையாகிய து வின் சுவரைத் துளைக்கிறது.

கோவிந்—மாத்திரமே து—வுக்குள் நுழைந்து விடுகிறார். இப்போது அவருக்குப் பெயர் கோவிந்து, உடனே சினை முட்டையின் சுவர் கடினமாக குறுகிக் கொள்கிறது. அதற்குப் பின் வேறு அணு நுழைய முடியாதபடி வலுவாக மூடிக் கொள்கிறது. இனி கோவிந்து தன் உடலை உருவாக்கும் வேலையில் முனைந்து ஒய்வின்றி கட்டுகிறார். கோவிந்த் நுழைந்தவுடன் ஒரு தேவ பரமாத்மா அணு அதனுடன் சேர்கின்றது. உயிர் வளர்ச்சிக்கு இந்த பரமாத்மாவே மூலகாரணம்.

முதலில் இரு உருண்டைகளுக்கிடையில் ஒரு வால் பகுதி அமைகிறது. அதன் பின் 8, 16, 32, 64, 128 என்று பல செல்கள் விளைந்து வளர்ந்து பெரியதாகிக் கொண்டு வருகிறது. இது விந்துக் குழாயில் இணைந்து கருப்பையுடன் தொடர்பு கொண்டிருக்கும் பகுதியை செல்கிறது.

இவ்வாறு ஐந்து நாட்களில் பயணம் செய்த கோவிந்து என்னும் கரு 0.1 செ.மீ நீளமே இருக்கும்போது கருப்பையினுள் நுழையும் அதன் பின் செல்களைக் கொண்டு கட்டுமான வேலை துவங்குகிறது.

கருப்பைச் சுவரிலுள்ள செல்கள் அதிகரித்து மற்ற செல்களும் சூழ்ந்து கொள்ளும் சுவர்ப் பகுதி தான் பின்னர் தொப்புள் கொடியாக மாறுகிறது. தொப்புள் கொடியே கருவுக்கு வேண்டிய சத்துப் பொருள்களை ஊட்டவும் கழிவுப் பொருள்களை வெளியேற்றவும் கருவியாக இருக்கிறது.

அங்குள்ள சுரோணித நீரில் சகல சத்துக்களும் இருந்தாலும் செயலற்றிருக்கின்றன. கோவிந்து வந்த பிறகே அவை உயிர்ப் படைந்து அவரைச் சூழ்ந்து கொள்கின்றன. எலும்பு, நரம்பு, தசை, தோல் ஆகியவைகளுக்கு வேண்டிய கோடான கோடி அணுக்கள் அங்கு இருக்கின்றன. எதனெதற்கு எது வேண்டுமோ அவைகளை ஆங்காங்கு பொருத்துகிருர். அவைகளை கொண்டு, கண்ணை, காதை, மூக்கை, கையை, காலை, உடலைக் கட்டுகிருர். இங்ஙனம் நடக்கும் ஜீவாதிக்கச் செயலின் வரிசைப் பாட்டினை விரித்துப் பார்த்தால் அற்புதமாக இருக்கும். இப்படி சுரோணித நீரில் 266 நாட்களில் விளைந்து உருவான கோவிந்து அதை விட்டு வெளியேறுகிருர்.

அப்போது உச்சிக் குழி அடைக்கப்பட்டு வாயும் நாசியும் திறக்கப் பெற சுவாசம் உள்ளே வாங்க ஆவென்று கத்திக் கொண்டு பிறக்கிருர். கோவிந்துக்கு இப்போது எல்லா அங்க கருவிகளும் இருந்தாலும் யாவும் செயலற்று இருக்கும். அவை, ஒவ்வொன்ருக செயலுக்கு வருகின்றன. தந்தையின் அக்கினியில் வளர்ந்து, தாயின் நீரில் வளர்ந்து இப்போது காற்றில் சுவாசித்து உணவுப் பொருள்களை உண்டு வளர்ந்து எல்லா அங்கங்களும் பூரணமாக செயலுக்கு வர 18 ஆண்டுகள் ஆகின்றன. நா சேர்ந்த பிறகு அவன் பெயர் கோவிந்துநா.

கோவிந்துநாவின் மனம் மகா வேகங்கொண்டு அலைகிறது. காமத்திஞலும் கோபத்தாலும் குமுறிக் கொண்டிருக்கிருன். அவைகளைத் தணிக்க பலவித செயல்களில் ஈடுபடுகிருன். எதஞலும் அவன் ஆசை மனம் அடங்குவதில்லை. அதற்கு அருளமுத தேவ ஆவியே தேவைப் படுகிறது. அதற்கு அடுத்த கட்டமாக ஒரு மெய்யான தெய்வத்தைத் தேடியடைந்து அவர்களிடம் ஆட்படுகிருன்.

நாசிக்கு வெளியே மூச்சோடா தவத்தால் ஈசனுடைய சக்தியைப் பெற்று வந்த குருபிரான் இவனுடைய ஜீவனில் பரிசுத்த தேவ ஆவியைப் புகுத்தி நித்திய முத்தி தேகத்தில் சம்பந்

164325

தப்படுத்தி வைக்கிறார்கள். இங்ஙனம் தரிசனைபெற்று மறு பிறப் படைந்த அவன் பெயர் இப்போது கோவிந்துநாதன்.

அறிவிலும் அமுத ஆவியிலும் விளைவேறி வரும் அவனுடைய தூலதேகம் இனி வாழத் தகுதியற்றதாக ஆகிவிடுகிறது. அதன் இறுதிக் கட்டத்திற்கு வந்த அவனுடைய ஜீவன் தூல தேகத்திலிருந்து விடுபட்டு சூக்கும தேகத்தில் குடியேறிக் கொள் கிறது. அதன் பேச்சும் மூச்சும் நின்று சமாதி நிலை அடைகிறான். தனக்குள் இருக்கும் கோடி சூர்யப் பிரகாச பரமாத்ம சொருபத்தை மறைபடா தரிசனையாகக் காண்கிறான். அந்த பிம்பத்தை மண் மறைவு செய்கிறார்கள். சாவுடன் இப்போது அவன் பெயர் கோவிந்தநாதசா.

கோவிந்தநாதசா—வின் பிம்பத்தை மண் மறைவு செய்த பின் தூல தேகம் செயலற்றதாகி விட்டாலும் ஜீவன் வல்லபத்தில் வளர்ந்து விளைந்து சூக்கும, காரண மகா காரண தேகங்களில் உள்ள பூ மண்டலம், ஜல மண்டலம், வாயு மண்டலம், அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அமுத தாரகை மண்டலம் ஆகியவைகளில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறது.

சர்வ மத வேதங்களும் ஒரே முகமாகக் கூறுகிறபடி உலக பிரளய அமளி அடங்கியதும் ஒரு வகையான ஆவி எங்கும் பரவு கிறது. அதனால் மண்ணில் மறைந்திருந்த ஜீவன் முக்தர்களின் வித்துக்கள் யாவும் விளைந்து நித்திய தேகத்தோடு எழுந்து வரு கிறார்கள். அப்போது எழுந்து வரும் கோ—வுக்குப் பெயர் கோவிந்தநாதசாமி யாகும். கோ—என்ற ஜீவன் விளைவேற ஒவ்வொரு கட்டத்திலும் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்களைக் குறிக் கவே விந்—து—நா—த—சா—மி என்ற எழுத்துக்களைக் குறிப்பிடு கிறோம்.

ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குணமும் உடலும் கருவில் அமைவதை நிர்ணயிக்கும் 44 குரோமோ செல்கள் உள்ளன. X என்பது பெண் குரோமோ செல். Y என்பது ஆண் செல். இரண்டு X செல்கள் இருந்தால் அது பெண் ஆகும். ஒரு X ஒரு Y செல்கள் அமைந்தால் அது ஆண் ஆகும். உபரியாக Y செல் அமையுமேயானால் அவர் வளர்ந்து மனிதனுக்கு மேலான தெய்வத் தன்மை அடைய முடியும். இங்ஙனம் கோடிக்கொன்று மிக அருமையாக வாய்க்கும் அ வ ரி ட ம் ஆக்கிரமித்து ஆளும் ஆற்றலும், கவர்ச்சியும், அடங்காத காம உணர்வும், மகா யுத்தி யான கூர்ந்த பேரறிவும் இருக்கும்.

Q84411
N83

6A
1-50